# அம்பாறை அதிரடியில் 7 கமாண்டோக்கள் பலி


விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 24 இதழ் 309
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 10-12-1994


(யாழ்ப்பாணம்)

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் இரு அதிகாரிகள் உட்பட ஏழு கொமாண்டோ படையினர் கொல்லப்பட்டனர். ஐந்து கோரல் கொமாண்டோ உட்பட பல நவீன ரக ஆயுதங்களையும் இத்தாக்குதலில் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று முன்தினம் பகல் 1-23 மணியளவில் இத்தாக்குதல் இடம்பெற்றது.

ஊறணி முகாமிலிருந்து செம்மணிக்குளம் என்ற இடத்திற்கு ஏராந்து சென்ற இரு

(4ம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றப்பட்ட நவீனரக ஆயுதங்கள்

(யாழ்ப்பாணம்]

பொலிஸ் அதிரடிப்படையினர் மீதான தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின்விபரம் ஹேரால்கொமாண்டோக்கள்-5, அவற்றுக்குரிய ரவைக்கூடுகள்-12, ஐக்கெட் கோல்சர்1, ரி 56 ஒன்று ரக துப்பாக்கி - 1, ரவைக்கூடு-1, நடுத்தர ரவைகள்-4, 5.56 ரவைகள்-575, நேட்டோ ரவைகள் லிங்குடன் 155, ஆமட்சார் 40 மி. மீ. கைத்துப்பாக்கி 1, கைத்துப்பாக்கி எறிகணைகள்-2, ஜே. ஆர். கைக்குண்டு-1, மழைக்கவசங்கள்-2, கைப்பைகள்-2, தண்

(4ம் பக்கம் பார்க்க)

# 'பிரபா'வை நாடுகடத்துமாறு இந்தியா கேட்கமாட்டாது!

## அமைச்சர் கதிர்காமர் தகவல்

[கொழும்பு]

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனை நாடு கடத்தவேண்டுமென்று இந்தியா கேட்டுக்கொள்ளமாட்டாது என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் நேற்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் இந்தியாவுக்கு மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இலங்கையில் இனப்பிரச்னை குறித்தும், விடுதலைப் புலிகள் குறித்தும் அவர் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிமமராவ், ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா, வெளிவிவகார அமைச்சர் தினேஷ்சிங் ஆகியோருடனும் பேச்சுவார்த்தை நடத்தினார்.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே பிரபாகரனை இந்தியா நாடு கடத்துமாறு இலங்கை அரசிடம் கேட்டுக்கொள்ளாது என இந்திய அரசாங்கத்தின் சார்பில அவருக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் அறியவருகிறது.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைக்கு சதிசெய்ததாக திரு. பிரபாகரன் புதுடில்லியினால் குற்றம் சாட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இரி

## ஆந்திரா கர்நாடகம் சட்டசபைத் தேர்தலில் ராவ் தோல்வியுறும் ஆபத்து

(புதுடில்லி)

இந்தியாவில் நடந்து முடிந்த நான்கு மாநிலங்களுக்கான சட்ட சபைத் தேர்தல்களில் இதுவரை வெளிவந்த முடிவுகளின்படி பிரதமர் நரசிம்மராவின் இந்திரா காங்கிரஸ் கட்சி எந்த ஒரு மாநிலங்களிலும் முன்னணி வகிக்கவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

கர்நாடக மாநிலத்தில் ஜனதாதள் கட்சியும் ஆந்திரப் பிரதேசத்தில் தெலுங்கு தேசக்கட்சியும் சிக்கிம் மாநிலத்தில் சிக்கிம் ஜனநாயக முன்னணியும் கோவா மாநிதில்மகாரஷ்டிரவாதி கோமன் கட்சியும் முன்னணி வகிப்பதாக செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (வி-இ)

## அரசு-புலிகள் பேச்சு மீண்டும் ஓரிரு வாரங்களில் ஆரம்பம்

[புதுடில்லி[

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் இன்னும் ஓரிருவாரங்களில் மீண்டும் ஆரம்பமாகின்றது.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் திரு. லஷ்மன் கதிர்காமர் நேற்று புதுடில்லியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அமைச்சர் திரு. கதிர்காமர் மேலும் தெரிவிக்கையில்:

இலங்கையில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தும்படியே இலங்கை மக்கள் ஏகோபித்த மனதுடன் ஜனாதிபதி திருமதி சந்திரிகாவுக்கு வாக்களித்துள்ளார்கள். பொதுமக்களின் இந்தவேண்டுகோளை செயல்படுத்துவதற்கு புதிய அரசு கடமைப்பட்டிருக்கின்றது என்று கூறினர்.

\- வி. இ-ரி

## க. பொ. த. [உ/த] பரீட்சை முடிவுகள் இன்று கொழும்பில் வெளியாகும்

[கொழும்பு]

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகள் இன்று சனிக்கிழமை வெளியிடப்படும் என பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்கள் இன்று மாலை 4 மணிக்குப் பிறகு அல்லது நாளை ஞாயிற்றுக்கிழமை தமது பரீட்சை முடிவுகளை தத்தம் பாடசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது,

யாழ்ப்பாணம் பாடசாலைகளின் முடிவுகள் அடுத்த வாரம் இங்கு வந்துசேருமென

(4-ம் பக்கம்பார்க்க)

## கொழும்பில் போரை நிறுத்த கோரி சமாதான ஊர்வலம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையில் நடைபெற்றுவரும் கொடிய யுத்தத்துக்கு முடிவுகாணப்பட வேண்டுமென்றுகோரி, 40 அரச சார்பற்ற நிறுவனங்களும் மனித உரிமை காப்புக் குழுக்களும் இணைந்து நேற்று கொழும்பில் மாபெரும் சமாதான ஊர்வலம் ஒன்றை நடத்தினர்கள்.

கொழும்பு காலிமுகத்திடலில் ஆரம்பமாகி விகாரமாதேவி பூங்காவில் முடிவடைந்த இந்த மாபெரும் ஊர்வலத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் இன மதபேதமின்றி கலந்து கொண்டார்கள்.

இந்த ஊர்வலத்தை ஏற்பாடு செய்த அமைப்புகளின் முக்கிய பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்;

இதேபோன்ற சமாதான ஊர்வலங்கள் நாடு பூராவிலும் நடத்த இருக்கின்றோம். இன்னும் இருமாதங்களில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணத்துக்கும் சமாதான ஊர்வலமாகச் செல்வதற்காகவும் எண்ணியுள்ளோம்,

[2-ம் பக்கம் பார்க்க]

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப்புலிகள் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## இனப்பிரச்னைக்கு புலிகள் இல்லாமல் தீர்வு காண முடியாது

(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் பங்களிப்பு இல்லாமல் இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வு காண முடியாதென்று நீதியரசர் வி. ஆர். கிருஷ்ணய்யர் பிரதமர் நரசிம்மராவிடம் தெரிவித்துள்ளார்.

நீதியரசர் கிருஷ்ணய்யர் அண்மையில் இந்தியப்பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப்பேச்சுக்களின் போதே

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் விடுதலைப்புலிகளுக்கு செல்வாக்கு அதிகரிக்கிறது

(சென்னை)

தமிழக மக்கள் மத்தியில் விடுதலைப்புலிகளின் வீரமும் நேர்மையான நிர்வாகத்திறனும் மதிப்புபெற்று வருவதாக தமிழ்ப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: அண்மைக்காலம்வரை விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகள் எனக் கூறிவந்த நாளிதழ்கள், எழுத்தாளர்கள், கருத்து உருவாக்கிகள், விடுதலைப் புலிகள் இல்லாமல் அரசியல் தீர்வு இலங்கையில் ஏற்பட முடியாதெனக் கூறிவருகின்றனர்

விடுதலைப் புலிகளின் துணிவு விடாமுயற்சி, தாக்குதல்களை

(4ம் பக்கம் பார்க்க)

# சமாதான தீர்வு முயற்சியை அரசு இன்னும் கைவிடவில்லை

— அமைச்சர் ரத்வத்தை

[கொழும்பு]

''நாடு முழுவதிலும் சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் சகல முயற்சிகளையும் செய்து வருகிறது இனப்பிரச்னைக்கு சமாதானதீர்வுகாணும் நிலைப்பாட்டை அரசு கைவிடவில்லை''

வடக்கு கிழக்கு மாகாணம், கொழும்பு கம்பஹா மாவட்டம் இன்னும் சில பகுதிகளில் அவசரகால சட்டத்தை நீடிப்பது தொடர்பான பிரேரணையைநாடாளுமன்றில்சமர்ப்பித்து உரையாற்றிய பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த இவ்வாறு கூறினார். அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:

மக்கள் அச்சமின்றி சமாதானமாக வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலையைஉருவாக்குவதற்கு அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளுக்கு மனப்பூர்வ ஒத்துழைப்பை சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் தர வேண்டும்.

பாதுகாப்பு நிலையில் மிகவும் சாதகமானசூழ்நிலை ஏற்படும்வரை சில பகுதிகளில் அவசரகால நிலை அமுல்செய்வது தவிர்சக முடியாதது என்றும் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

(கே-ரி)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம் வலயம் 01ல் பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான தொழில் ஆக்கதிறன் போட்டியில் பங்குபற்றியோருக்கு 17ம் திகதி நடைபெறவிருந்த சான்றிதழ் வழங்கும் வைபவம் பொதுத்தேர்வு காரணமாக பிற்போடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுகளில் யாழ்ப்பாணம் நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை, கல்விக் கோட்டங்களுக்கான நிகழ்ச்சியா/ கனகரத்தினம் ம ம. வி. யில் எதிர்வரும் 22ம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும். சாவகச்சேரிக் கோட்டத்துக்கான ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி எதிர்வரும் 17ம் திகதி சாவகச்சேரி டிறிபேக்கல்லூரியில்நடைபெறும்.

## வரி விளம்பரம்

### ஆங்கிலம் கணிதம் 95

ஆண்டு 5, 6ல் இருந்து O/L வரை விசேடமாக ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும் ஆசிரியர் B. Sc 85, சிவன் கோவிலடி. மணல்தறை லேன், திருநெல்வேலி.

(சி-1341)

### வைத்தியம்

நாட்பட்ட நோய்களுக்கு திங்கட்கிழமைகளில் மட்டும் ஹோமியோபதி சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர் எம். வி, தில்லைச்சந்திரன் பதிவுபெற்ற ஹோமியோபதி வைத்தியர், புகையிரத ஒழுங்கை, சாவகச்சேரி.

சி-1339

### நத்தார் பெருநாள் பரிசு

மில்க்வைற் சலவைத்தூள் பாவனையாளர்கட்கு இரட்டிப்பு இனிய செய்தி. 450 கிறும் பக்கற் சலவைத் தூள் விலை ரூபா 45/- ஆகக் குறைப்பு. 450 கிறும் வெற்றுப் பக்கற் ஒன்றுக்கு இருப்புள்ளவரை வழிபாட்டுக்குரிய கிறிஸ்தவ வண்ணப் படம் அன்பளிப்பு.

— மில்க்வைற்.

எ-4578

## திருவெம்பாவை இன்று ஆரம்பம்

(கொழும்புத்துறை)

உதயத்தின் முன் திருவெம்பாவை பூசை இன்று சனிக்கிழமை காலை சகல இந்துக் கோயில்களிலும் ஆரம்பமாகி விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டுடன் தொடாந்து பத்துத் தினங்கள் இடம்பெறும்.

பூசை முடிவில் திருக் கோயிலை தினமும் வழிபடுங்கள், திருமுறையைத் தினம் ஓதுங்கள் என்பதற்கிணங்க திருவாதவூரர் திருவாய் மலர்ந்கருளிய ''திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை'' இருபது பாடல்களும் பாடப்படும்.

மார்கழித் திருவாதிரையும் நடராசர் ஆர்த்திரா தரிசன வழிபாடும் எதிர்வரும் 19ம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

154-சி

## உடுப்பிட்டி ப. நோ. கூ. ச கூடிய லாபம் ஈட்டியது

[ஆனைப்பந்தி]

இவ்வாண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் யூன் 30ம் திகதி வரையான காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில் உள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் படிவம் 28ன் படியான இலாப நட்ட விபரப்படி அதிகூடிய இலாபத்தை உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஈட்டியுள்ளது. கைதடி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆகக் குறைந்த லாபத்தை ஈட்டியுள்ளது.

இதேபோன்று அதிகூடிய நட்டத்தில் கட்டைவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கமும், ஆகக் குறைந்த நட்டத்தில் அளவெட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கமும் இயங்கியுள்ளதாக மேற்படி இலாப நட்ட விபர அறிக்கை கூறுகின்றது.

(101-சி)

### இலவச மூக்குக் கண்ணடி

[கொழும்புத்துறை]

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் முயற்சியால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த கண் பார்வைக் குறைவானவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இலவச மூக்குக் கண்ணடிகளை வழங்குவதற்கான சகல நடவடிக்கைகளையும் தற்போது மேற்கொண்டு வருகின்றனர்.

-154

### நூல் வெளியீட்டுவிழா

(யாழ்ப்யாணம்)

கலாநிதி குகபாலனின் ஆக்கபூர்வமான 'தீவகம் வளமும், வாழ்வும்' நூல் வெளியீட்டு விழா, நாளை 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

யாழ் பல்கலைக்கழகப் புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் செ. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இவ் வெளியீட்டு விழாவில், இந் நூலின் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் திரு க. பரமேஸ்வரன் நிகழ்த்துவார்.

-162

## இம்முறை நிவாரணமாக 'மா' கொடுபடமாட்டாது

(யாழ்ப்பாணம்[

இடம்பெயர்ந்தவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வரும் நிவாரணப் பொருட்களில் புரட்டாதிமாத கடைசி இருவாரங்களுக்கும் 'மா' கொடுக்கப்படமாட்டாது என யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இம்முறை இவர்களுக்கு அரிசி, சீனி, மைசூர்ப்பருப்பு தாராளமாகவும் கைலண்ட் பால் மாவும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை மாவுக்கு ஒரு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள்.

162-சி

## பல நூறு கோடி டொலர் நாணயமாற்று மோசடி

(கொழும்பு)

பல நூறு கோடி டொலர் சம்பந்தப்பட்டநாணயமாற்று மோசடி ஒன்றை சி. ஐ. டி பகுதியினர் கண்டு பிடித்துள்ளனர்.

இந்தமோசடி 10 நாடுகளில் இடம் பெற்று வந்ததாகவும் இலங்கை அந்த மோசடிக்கு கேந்திரநிலையமாக விளங்கியது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக இரண்டு வெளிநாட்டுப் பெண்கள் இலங்கையை விட்டு வெளியேற முயற்சி செய்ததை சி. ஐ. டி. பகுதியினர் தடுத்துள்ளனர். இவர்களின் கடவுச்சீட்டுக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ம-சி

### தமிழீழ நீதிமன்றில்

## காயமடைந்தவர்களுக்கு 10,000 ரூபா இழப்பீடு

(சாவகச்சேரி)

மட்டுவில் பகுதியில் வீதியில் நின்ற இரு இளைஞர்களுக்கும் அப்பகுதியால் வந்து கொண்டிருந்த ஐந்து இளைஞர்களுக்கும் இடையில் திடீரென ஏற்பட்ட வாக்குவாதம் இறுதியில் கைகலப்பில் முடிவடைந்தது.

வாக்குவாதம் உச்சக்கட்டத்தையடைந்தது வீதியில் நின்ற இரு இளைஞர்கள் மீது ஐந்து இளைஞர் கூட்டாகச் சேர்ந்து தாக்கி காயம் விளைவித்தது தொடர்பாக சாவகச்சேரி தமிழீழ மாவட்ட நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை நீதியாளர் சுடர் முன்னிலையில் நடைபெற்றபோது குற்றவாளிகள் ஐவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இவர்களைக் குற்றவாளியாகக் கண்டு குற்றப்பணமாக தலா ஆயிரம் ரூபா விகிதம் மொத்தம் ஐயாயிரம் ரூபாவும் இழப்பீட்டாக தலா இரண்டாயிரம்ரூபா விகிதம் மொத்தம் பததாயிரம் ரூபாவும் செலுத்துமாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

## எம். ஜி. ஆரின் 7ம் ஆண்டு நினைவு விழா

(யாழ்ப்பயணம்)

புரட்சித் தலைவர் அரர் எம். ஜி. ஆரின் 7ம் ஆண்டு நினைவு விழா எதிர்வரும் 24, 25, 26ம் சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலய அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நாட்களில் நாதஸ்வர, தவில், கச்சேரிகள் நினைவுப் பேருரை, கவியரங்கம், பட்டிமண்டபம், தமிழ் இசை சட்டமன்றத்தில் வாதம், கரகாட்டம், நாடகம், நடனம், வில்லிசை, மெல்லிசை போன்ற நிகழ்ச்சியும் 25ம் திகதி பல்வேறு விளையாட்டு போட்டிகளும் நடைபெறும்.

இவற்றுக்கான சகல ஏற்பாடுகளையும் மேற்படி விழா தலைவர் திரு. பொன். மதிமுகராஜா செய்துவருகிறார்

[சி]

### கொழும்பில

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் மதிக்கப்படவேண்டும், தமிழ்மொழி ஒரு அதிகார மொழியாக முழுமையாக அங்கீகரிக்கப்படவேண்டும். அத்துடன் அரச சேவைகளில் தமிழர்களுக்கு போதிய இடம் ஒதுக்கப்படவேண்டும், வடபகுதியில் இராணுவம் ஏற்படுத்திய படுகொலைகளையும், அழிவுகளையும் விசாரணை செய்யவேண்டும், போரினால் பாதிக்கப்படுபவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளையும் புதிய அரசுக்கு விடுத்துள்ளோம்,

வெறும் சமாதானத்துக்காக நாம் ஊர்வலங்களை நடாத்தவில்லை. சகல அனைத்து இலங்கை மக்களின் ஜனநாயக உரிமைகளும் மதிக்கப்படவேண்டும் என்பதே எமது போராட்டத்தின் நோக்கமாகும் என்று கூறினர்.

நேற்று கொழும்பில் நாள் முழுவதும் நடைபெற்ற உணர்ச்சிபூர்வமான ஊர்வலத்தினால் போக்குவரத்துகள் பெரிதும் பாதிக்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

-வி-ரி

## பாதுகாப்பு கூடுகள் விஷமிகளால் திருட்டு

(யாழ்ப்பாணம்)

வீதியோர மரங்களின் பாதுகாப்புக்கென அமைக்கப்பட்ட கூடுகள் சில விசமிகளால் தொடர்ந்தும் களவாடப்பட்டு வருகின்றன.

அண்மையில் கொடிகாமம் நாவலடி பாடசாலைக்கு அருகாமையில் 10 பாதுகாப்புக் கூடுகள், எழுதுமட்டுவாள் பகுதியில் 08 கூடுகளும் இத்தாவில் பகுதி 05 கூடுமாக மொத்தம் 23 கூடுகள் களவாடப்பட்டுள்ளன.

நாட்டின் சூழலை பேணிப் பாதுகாப்பதற்காக நாட்டப்பட்ட மரங்களின் பாதுகாப்புக்கென அமைக்கப்பட்ட கூடுகள் களவாடப்பட்டால் மரங்கள் பாதுகாக்கப்படமாட்டாது. விறகுத்தேவைக்காக மரங்கள் அழிக்கப்பட்டுவரும் இவ்வேளையில் மரங்களை நட்டு பராமரிக்காது போனால் எமது நாட்டின் சூழல் பாதிக்கப்படுவதுடன் எம் மக்கள் எரிபொருள் பிரச்னையையும் எதிர் நோக்கவேண்டிவரும்.

எனவே பொதுமக்கள் விழிப்புடன் இருந்து எமது தேசத்தின் சூழலைப்பாதுகாப்பதற்கு விசமிகளின் அடாவடித்தனங்களைக் கண்டு பிடித்து ஒத்துழைப்பு நல்குமாறு தமிழீழ பொருண்மிய மேமபாட்டு நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது.

## பதில் அரச அதிபரை மக்கள் சந்திக்கும் நாட்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டப் பதில் அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகத்தை அவரது செயலக அலுவலகத்தில் பொதுமக்கள் பின்வரும் நாட்களில் சந்திப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி யாழ். மாவட்டச் செயலகத்தில் திங்கள், புதன் ஆகிய தினங்களில் காலை 9-00 மணி தொடக்கம் பிற்பகல் 2-00 மணி வரை அவரது அலுவலகத்தில் பொதுமக்கள் அவரைச் சந்திக்கலாம.

வேலணை, ஊர்காவற்றுறைப் பிரதேசச் செயலர் பிரிவுகளில் மக்கள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் பிற்பகல் 2-00 மணி முதல் 4-00 மணி வரையும். வெள்ளிக்கிழமைகளில் காலை 9-00 மணி தொடக்கம் பிற்பகல் 4-00 மணி வரையும் அவரது செயலகத்தில் சந்திக்கலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

-162

### பயிற்சி கூடம்

(யாழ்ப்பாணம்)

சாரணர் தலைவர்களும், குருளைச் சாரணத் தலைவர்களும அதிஉயர்பயிற்சியான தருசின்னப்பயிற்சி பெறுவதற்கான கூட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இம்மாதம் 12ம் தேதி திங்கட்கிழமை மாலை 4-00 மணிக்கு நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு ஆதாரப் பயிற்சி அவத்தை இரண்டு முடித்துள்ள சாரணத் தலைவர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு யாழ். மாவட்ட சாரண ஆணையாளர், திரு. இ. மகேந்திரன் கேட்டுள்ளார்.

### மணிவாக்கு

வாழ்க்கையில் நீ வெற்றிபெற வேண்டுமானால் முயற்சியை நண்பனாக்கிக் கொள். அனுபவத்தை ஆசானாக அடை; முன் ஜாக்கிரதையை உன் மூத்த சகோதரனாக நினை. நம்பிக்கையை உன்னைப் போதித்து வளர்க்கும் தந்தையாக நம்பு.

- அடிஸன்

# போர்க்கால சூழ்நிலையால் வைத்திய சேவைகள் பாதிப்பு

— டாக்டர் சீர்மாறன்

(யாழ்ப்பாணம்)

நாம் எல்லோரும் இன்று ஒரு யுத்த சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த நிலையில் எமக்கு போஷாக்கு நிறைந்த சத்துணவோ மற்றும் எமக்கு ஏற்படும் நோய்களுக்கான மருந்துவகைகளோ பெற்றுக் கொள்வதில் சிமரமாகவுள்ளது. இதனால் எமது குழந்தைகள் போஷாக்கின்மை காரணமாகவும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணம் பொம்மை வெளிப்பகுதியில் நேற்றுக் காலை வைத்திய நிலையமொன்றை வைபவ ரீதியாக நாடாவை வெட்டி திறந்து வைத்து உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ். பி. ஆர் சீர்மாறன் தனதுரையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

திரு. சீர்மாறன் தொடர்ந்து உரையாற்றுகையில்; தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் மிகவும் பாதிக்கப்பட்ட தொழில்களில் வைத்திய தொழிலும் ஒன்றாகும் பல பகுதிகளிலுமிருந்து இடம் பெயர்ந்து வாழும் மக்கள் வைத்திய வசதிகளைப் பெறுவதில் மிகுந்த சிரமத்துக்குள்ளாவதைக் காணக்கூடியதாக உள்ளது. தற்போதைய சூழ்நிலையில் வயிற்றோட்டம், மலேரியா, வாந்திபேதி போன்றநோய்களினால் மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள்

இன்றைய குழந்தைகளே நாளைய தலைவர்கள் இக்குழந்தைகளைக் கவனிக்க வேண்டியது ஒவ்வொரு பெற்றோருடைய தலையாய கடமையாகும். இக்குழந்தைகளுக்கு ஒழுங்கான வைத்திய சேவை மற்றும் போஷாக்குள்ள சத்துணவுகள் கொடுக்கப்படுவதால் இவர்கள் நல்ல ஆரோக்கியமான ஒரு வருங்காலச் சந்ததியை உருவாக்க முடியும். இதில் ஒவ்வொரு பெற்றோரும் விழிப்புணர்வுடன் இக்குழந்தைகளுக்கான தேவைகளை அந்தந்த நேரத்தில் நிவர்த்தி செய்து கொள்ளவேண்டும்.

இன்று இங்கு ஆரம்பித்து வைக்கப்படும் இந்த பேர்லி கிளினிக் தனது சிறந்த சேவையை இன்றைய இந்தக் கஷ்டமான சூழ்நிலையில் மக்களுக்கு ஆற்றவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்

16 2-சி

## இன்று

(கொழும்புத்துறை)

தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இருந்து இன்று 10ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை வீதிப் பஜனை ஆரம்பமாகி 10 தினங்கள் தொடர்ந்து நடைபெறும். - 154

0 0

(கொழும்புத்துறை]

கொழும்புத்துறை மணலியம்பதி ஸ்ரீ அம்மன் ஐயனார் ஆலயத்தில இன்று 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு திருவெண்பாவை பூசை, வழிபாடுகள் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். -154

0 0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஆத்தியம்பதி ஸ்ரீசந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் இன்று 10ம் திகதி சனிக்கிழமை காலை 5-00 மணிக்கு திருவெம்பாவை விசேட அபிஷேகம், வழிபாடு ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும். -154

## நமது நோக்கு

### மனித உரிமைகள்

மனிதர்கள் சமூகமாக வாழும்போது சில பொதுவான விதிகளை ஏற்று வாழ வேண்டும். அல்லாவிடில் பிணக்கும் மோதல்களும் தவிர்க்க முடியாதனவாகிவிடும்.

ஆதிகாலத்தில் - அந்தப் பொது விதிகளை அமுல்படுத்த இருந்த அரசன், அதிகார வெறியினால் மனித உரிமைகளை மதிக்காத காரணத்தினால் மக்களால் தூக்கி வீசப்பட்டான்

மக்கள் ஆட்சி மலர்ந்து விட்டதே என மக்கள் மகிழ்ந்திருந்த வேளையில், மக்கள் சேவைக்கென வந்தவர்களுக்கும் அதிகார போதை என்ற வியாதி தொற்றிக் கொண்டது.

மனித உரிமைகளை மதிக்காத பேரரசுகள் பல மண்ணோடு மண்ணாக மாண்டுபோன கதைகளைப் போலத்தான் இருபதாம் நூற்றாண்டிலும், மனித உரிமைகளைப் பேணாத மக்கள் அரசுகளும் தேர்தல்களில் தோல்வியுறுவதைக் காண்கிறோம்.

இரண்டாவது உலகப் போருக்குப் பின் - அமைதியைக் கட்டிக் காக்க ஐ. நா. சபை அமைக்கப்பட்டது.

போருக்கான காரணங்களை அது ஆராய்ந்த போது, மனிதனின் அடிப்படை உரிமைகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தது.

எனவேதான் - மனித உரிமைகள் என்றால் என்ன? அவை எப்படிப் பேணப்பட வேண்டும்? என்பதற்கான விளக்கங்களையும், வழிகாட்டல்களையும் ஒப்பந்தங்களாகச், சாசனங்களாக ஐ. நா. வெளியிட்டு அரசுகள் அவற்றை ஏற்று அமுல்படுத்த வேண்டுமெனக் கேட்டது.

இதன் தாற்பரியங்களை மக்களும் உணர வேண்டும் என்பதற்காகத்தான் ஆண்டு தோறும் மனித உரிமைகள்தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இலங்கை அரசு ஐ. நா. வின் சில சாசனங்களை ஏற்காது தட்டிக் கழித்து வந்தது.

ஏனெனில் - தமிழர்களின் உரிமைக் கிளர்ச்சிகளை அடக்க இச்சாசனங்கள் தடையாக இருந்து வந்தன.

புதிய அரசு பதவிக்கு வந்த பின் இவற்றின் சில விதிகளை ஏற்றுக்கொண்டதாக அறிவித்தது. மனித உரிமைகள் பேணப்படும் என்பதற்கு நல்ல அறிகுறியாகக் கணிக்கப்படுகின்றது.

## புலதும் பத்தும்

### அவரின் திரிப்பு

19ம் நூற்றாண்டில் யாழ். ஆறுமுக நாவலருக்கும் தமிழக வள்ளலாருக்கும் போட்டி; நீதிமன்ற வழக்கு 20ம் நூற்றாண்டில் வள்ளலாரின் ஆதரவாளர் ஒருவரின் திரிப்பு இது.

ம. பொ. சி.யின் 'வள்ளலார்கண்ட ஒருமைப்பாடு'' என்னும் நூலில் (ப. 294) காணப்படுவது; ''வள்ளலார் நூல்கள்1851, 1854ல் வெளிவந்தன. ஆறுமுக நாவலர் உரைநடை நூல்கள் 1856க்குப் பின்பே வெளிவந்தன!''

உண்மை என்ன? நாவலரின் பால பாடங்கள் சில 1852க்கு முன்பும், பெரிய புராணம் 1852லும், சூடாமணி நிகண்டு 1849லும் வெளிவந்தன.

**பிரதான குறிப்பு:** ம. பொ. சி.யின் இந்த நூலுக்கு இந்திய சாகித்திய அக்கடமி பரிசளித்தது. இந்திய அரசின் இலட்சனையிற் காணப்படும் குறிக்கோள் வாசகம் ''உண்மையே வெல்லும்!''

—மயூரன்

## இராசி பலன்

*10 - 12 - 1994*

சனிக்கிழமை

(தமிழுக்குகார்த்திகை24)

அட்டமி இரவு 8-19 வரை, பூரட்டாதி இரவு 1-53 வரை மரணயோகம், இராகுகாலம் பகல் 9-17 முதல் 10-44 வரை சுபவேளை மாலை 3-19 முதல் 4-49 வரை திருவெம்பாவை ஆரம்பம்.

மேடம்- கடின சிந்தை, தொழில் மாந்தம், குழப்பம்.

இடபம்- காரிய வெற்றி, பெரியோர் பாராட்டு பயணம்.

மிதுனம்- தொழில் லாபம் இனசன மகிழ்ச்சி, சுபவிரயம்.

கடகம்- முரண்பாடு தந்தையர் பகை, அலைச்சல்.

சிங்கம்- ஏமாற்றம், வயிற்றில் ரோகம், யோசனை.

கன்னி- தொல்லைகள் அகலுதல், பணவரவு, குதூகலம்.

துலாம்- நண்பர் சகவாசம் சுபகாரியம், விருந்தோம்பல்.

விருச்சிகம்- கருத்து வேற்றுமை, அதிகாரிகள் சினம் அமைதிக்குறைவு.

தனுசு- சகோதர பகை, குடும்பகவலை, காரியதடை.

மகரம்- புதிய தகவல், தொழில் சிறப்பு, இனசன உதவி.

கும்பம்- கலக்கமடைதல், கோபவார்த்தை, கடன் சுமை

மீனம்- காரியபலிதம், தெய்வீக செலவு, கற்பனை,

ஜோஸ்யர்

# விடுதலைப்புலிகளின் பதில் விரைவில் அரசுக்கு கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசினால் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திற்கான பதிலை, விடுதலைப் புலிகள் விரைவில் அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அது பற்றி மேலும் தெரிய வருவதாவது: இலங்கை அரசின் போர் நிறுத்தம் குறித்த யோசனைகள் அடங்கிய கடிதம் தமிழீழத் தேசியத் தலைவருக்குக் கிடைத்துள்ளது. அந்த யோசனைகள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது. மேற்படி கடிதம் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையினால் அனுப்பி வைக்கப்பட்டது. தாக்குதல் நடவடிக்கையை நிறுத்துவது, அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகள் தொடர்வது தொடர்பான விடயங்கள் குறித்த விபரங்கள் இக்கடிதத்தில குறிப்பிடப்பட்டுள்ளன.

இக்கடிதம் குறித்து விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. இதற்கான பதில், விரைவில் இலங்கை அரசுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் பதில் கிடைத்ததும் யுத்த நிறுத்தம் அறிவிக்கப்படுமெனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த கொழும்பில் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ம-சி

### ஆனையிறவு மோதல் படையினர் மூவர் காயம்

(கொழும்பு)

ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும்மிடையில் எற்பட்ட மோதல் ஒன்றில் மூன்று இராணுவத்தினர் காயமடைந்தனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

*1994—12—10 சனி இரவு*

08-01 சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி
08-10 நிகழ்வும் பகிர்வும்
08-25 நேயர் கடிதங்கள்
08-30 செய்திகள்
08-40 லெப்ரினன்ட் கேணல் மதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

*1994—12—11 ஞாயிறு காலை*

07-02 மாவீரவணக்கம்
07-15 களத்தில் மலர்ந்தவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

வட — கிழக்கில்

# 15,000 பொலிஸாருக்கு விரைவில் இடமாற்றம்

(கொழும்பு)

யுத்தம் நடைபெறும் பகுதிகளில், நான்கு வருடங்களுக்குக் கூடுதலான காலம் சேவையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் தாமதமின்றி இடமாற்றம் செய்யப்பட இருக்கின்றனர்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் கடந்த நான்கு வருட காலச் சேவையைப் பூர்த்தி செய்த றிசேர்வ் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இந்தச்சலுகை வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் 15,000க்கும் அதிகமான றிசேவ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் விரைவில் இடமாற்றம் செய்யப்பட உள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

ம-சி

# அரசறிவியல் பாட இரு நாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான மன்று - சமூக விஞ்ஞானப் பகுதி 'டி' நடாத்தும் க. பொ. த. உயர்தர மாணவர்களுக்கு அரசறிவியல் - அரசியல் விஞ்ஞானப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும், பயிற்சிப் பட்டறையும் இம்மாதம் 23ம், 24ம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகப் பொருளியல் துறையில் நடைபெறவுள்ளது

கருத்தரங்கு மூன்று பகுதிகளாக நடைபெறும். 1. அரசறிவியலில் சில அடிப்படைக் கோட்பாடுகள், 2. இலங்கை அரசியலின் பரிணாம வளர்ச்சி, 3. பொது நிருவாகவியல், சர்வதேசஅரசியல்நடைமுறைகள்.

இக்கருத்தரங்கில் க. பொ. த. உயர்தர வகுப்புக்களில் அரசறிவியலை ஒரு பாடமாகக் கற்பிக்கும் எல்லா ஆசிரியர்களும் பங்குபற்றலாம். அவர்கள் நேரடியாகவோ அல்லது கடித மூலமோ இம்மாதம் 15ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். பயிற்சிப் பட்டறையில் பங்குகொள்ள விரும்பும் ஆசிரியர்கள், தமது ஆலோசனைகள், விபரமாக ஆராயவேண்டிய தலைப்புகள் இயலுமானால் தங்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகள் என்பவற்றை 15ம் திகதிக்கு முன்பாக அறியத் தரவேண்டும்.

இக்கருத்தரங்கை நடாத்துவதற்குத் தனியான பொருள் வசதி இல்லாத நிலையில் இதில் பங்குபற்றுபவர்களை ரூபா 100 அன்பளிப்பாகவும், யாழ்ப் விஞ்ஞான மன்ற அங்கத்துவக் கட்டணமாக ரூபா 100ம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

-சி

வீடுதோறும் அணை அமைத்தே - நாம்
வீதியோரம் நீரை தேக்கவிடோம்

# அரசு புலிகள் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படவேண்டும்

## சென்னை கருத்தரங்கில் தெரிவிப்பு

(சென்னை[

ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் பேசும் அரசியல் நடைமுறையில் முன்னேற்றம் ஏற்படவேண்டும்'' இவ்வாறு இந்துப் பத்திரிகையைச் சேர்ந்தராம், முன்னாள் தூதுவர் தோமஸ் ஆபிரகாம், பேராசிரியர் சூரிய நாராயணன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்

சென்னைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையிலே அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்கள்,

இந்திய நிகழ்வுகள் நீதி மன்ற ஆணைக்குழு விசாரணை குற்றச்சாட்டுகள் இதற்கு தடையாக அமையக் கூடாது என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை இலங்கை இந்திய நட்புறவுச் சங்கம்சென்னை வை. எம். சி. ஏ. வில் கூட்டம் நடத்தி ராஜீவ் கொலை விசாரணை காரணமாக ஸ்ரீலங்கா அரசு விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகளுக்கு இந்திய அரசு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது என தீர்மானம் இயற்றியுள்ளது.

- ரி

குண்டுகளுடன் காரின் முன் பாய்ந்து

# மாலைதீவு ஜனாதிபதியை கொல்லும் திட்டம் அம்பலம்

(புதுடில்லி)

குண்டுகளை உடலில் கட்டிக்கொண்டு மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூமின் காரின் முன்னால் பாய்ந்து அவரை கொலை செய்ய திட்டப்பட்ட திட்டம் தற்போது அம்பலத்துக்கு ந்துள்ளது.

இந்தியாவின் விண்வெளி திட்டத்தை உளவுபார்த்த குற்றத்துக்காக இந்தியப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்ட மாலை தீவைச் சேர்ந்த மரியம்றஸிதா என்ற பெண்ணின் டயரிமூலம் மேற்படித்திட்டம் வெளிவந்துள்ளது.

கடந்த அக்டோபர் மாதம் கைசெய்யப்பட்ட இப்பெண், பாலியல் நடவடிக்கைகள் மூலமும், பெருமளவு பணம் கொடுத்தும், இந்தியாவின் விண்வெளித் திட்டங்களை இந்தப் பெண்பெற்றிருந்தார்.

இந்தப் பெண்ணின் டயறியின் மற்றுமொரு பகுதியில் இருந்த குறிப்பிலேயே மாலைதீவு ஜனாதிபதியின் கொலைத் திட்டம் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தக் கொலைத்திட்டத்தை தமிழ் நாட்டைச் சேர்ந்த சீதா என்ற பெண்ணே தனது உடலில் குண்டைக் கட்டிக்கொண்டு மாலைதீவு ஜனாதிபதியின் காரின் முன்னால் பாய்வதென்று குறிப்பிடப்பட்டிருந்தது,

வி-ரி

# தமிழக அகதிமுகாம்களுக்கு

## மனித உரிமை கமிஷன் விஜயம்

(சென்னை)

தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் முகாம்களில் உள்ள சீர்கேடுகளை கண்டறிவதற்காக இந்திய மனித உரிமைக் கமிஷனின் பிரதிநிதிகள் இன்று சென்னைக்கு வருகின்றார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள அகதிகள் முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் மனித உரிமை மீறல் செயல்கள் நடைபெறுவதாக வெளிவரும் செய்திகளைத் தொடர்ந்தே மேற்படி கமிஷன் இன்று தமிழ்நாட்டுக்குச் செல்வதாகவும் இவர்கள் தமது தமிழ்நாட்டு விஜயம்பற்றி விரைவில் அறிக்கை ஒன்றை வெளியிட இருப்பதாகவும் இக்கமிஷனின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வி-இ-ரி

அந்தமான்

# தமிழ் சங்கத் தலைவர் வெட்டிக் கொலை

(மணிலா)

அந்தமான் தமிழ் சங்கத் தலைவர் திருநாவுக்கரசு கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வெட்டிக் கொல்லப்பட்டார் என தெரிவிக்கப்பட்டது.

அவர் ஜீப்பில் சென்று கொண்டிருந்தபோது இந்தச் சம்பவம் நடந்தது.

முதலில் அவரது கைகளைக் கொலையாளிகள் துண்டித்தனர். பின்னர் அவரது கழுத்துக்குக் குறிவைத்து வெட்டபபட்டது.

திருநாவுக்கரசு அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தக் கொலை தொடர்பாக ஆயுதங்களுடன் இரு தமிழர்கள் பொலிஸில் சரணடைந்துள்ளதாகவும் தெரிவிக்கபபட்டது.

இ

தமிழீழத்தில் விடுதலை உணர்வு

# மங்காமல் இருக்கிறது

[சென்னை]

தமிழீழத்தில் சட்டம், ஒழுங்கு, நிர்வாகம், நீதி, மன உறுதி, எளிமை என்பனவற்றுடன் தமிழீழ மக்கள் வசதிக்குறைவுகள் பலவற்றுள்ளும் விடுதலை உணர்வு மங்காமல் இருப்பதை அண்மையில் தமிழீழத்துக்கு விஜயம்செய்த பத்திரிகையாளர்கள், மற்றும் இலங்கை - இந்திய நட்புறவுச் சங்கத்தினரும் தெரிவித்துள்ளனர்.

தாயகம் திரும்பிய அகதிகள் நலமாக உள்ளனரா எனப் பார்வையிடுவதற்கு சென்ற இவர்கள் தமிழீழத்தில் துன்பங்களுக்கு மத்தியிலும் மக்களின் தன்னம்பிக்கை உணர்வையும் சிங்கள ஆட்சிப் பகுதிகளில் தமிழ் அகதிகள் படும் சொல்லொணுத்துயரையும் கண்டறிந்தனர்.

விடுதலைப்புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்கள், அரசியல் அமைப்புகள் பெறுமதியற்றவர்களாக இருப்பதையும் அவர்கள் கண்டறிந்தனர்,

ரி

# வீரச்சாவு

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவுப் பகுதியில் கடந்த புதன்கிழமை விடுதலைப் புலிகளுக்கும் - இராணுவத்தினருக்குமிடையில் ஏற்பட்ட திடீர் மோதலில் மூன்று விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்தனர்.

மேஜர் பிரசன்ன (சின்னத் தம்பி சிவகுமார் - மிருசுவில்), கப்டன் வாஞ்சிநாதன (வேல் முருகு குமார் - மட்டுநகர்), கப்டன் செந்தாளன் அல்லது ஐக்கிய லிங்கம் (தெய்வநயாகசம் ரவி மட்டுநகர் ஆகிய மூவருமே வீரச்சாவடைந்தனர்.

வி ரி

# மா தட்டுப்பாட்டினால் பாண் உற்பத்தி பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மாவுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனால் பொது மக்கள் தமது உணவுத்தேவைகளுக்கு மா பெறுவதில் பல வகயான சிரமங்களுக்குள்ளாகியுள்ளனா.

யாழ். நகரில் உள்ள சகல பேக்கரிகளும் நேற்று தமது பாண் உற்பத்திகளைத் திடீரென நிறுத்திக்கொண்டார்கள். மா தட்டுப்பாடு காரணமாகவே பாண் தயாரிப்பு இடைநிறுத்தப்பட்டதெரிவிக்கப்படுகிறது. நேற்றுக் காலை பா பெறுவதற்கு பொது மக்கள்பேக்கரிகளுக்கும் கடைகளுக்கு மாறி மாறிஅலைந்துதிரிந்ததைக் காணககூடிதாக உள்ளது.

இதேவேளை திருகோணமலையிலிருந்து மா ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று பருத்தித்துறை நோககிப்புறப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

162-ரி

## படிப்பு விடுப்பு பத்திரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பட்டப் பின் கல்வி டிப்ளோமா பயிற்சியில் கல்வி கற்று இரண்டாம் வருடப் பரீட்சை குத் தோற்றிய மாணவர்கள் தங்கள் படிப்பு விடுப்பு பத்திரங்களை நாளை 11 திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு மேற்படி நிலையத்தில் பெற்றுக்கொள்ளுமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் ரி. கமலநாதன் கேட்டுள்ளார்.

இப்பத்திரம் பெற வரும்பொழுது ஒன்றுகூடல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவற்றையும் கொண்டுவருமாறு கேட்கப்படுகிறது.

# திரையரங்கு தீ பிடித்து 300 சிறுவர்கள் பலி

—சீனாவில் பரிதாபம்—

(பீக்கிங்)

சீனாவில் சினிமா திரை அரங்கொன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் 300க்கும் அதிகமான பாடசாலைச் சிறுவர்கள் உடல்கருகி பலியானார்கள்.

சீனாவின் வடமேல் மாகாணத்தில் தராமி என்ற நகரத்திலுள்ள சினிமா திரை அரங்கில் சிறுவர்களுக்கான கலை நிகழ்ச்சி ஒன்று காண்பிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியை 800 சிறுவர்கள் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் திடீரென்று தீ பற்றிக்கொண்டது, தீயிலிருந்து தப்பிக் கொள்வதற்காக சிறுவர்கள் வெளியே ஓடியபோது திரையரங்கின் கதவுகள் யாவும் மூடப்பட்டிருந்தமையால் சிறுவர் தீயில் கருகியும், புகைமண்டலத்தினால் மூச்சுத் திணறியும் மாண்டனர். 250க்கும் அதிகமான சிறுவர்கள் படுகாயமடைந்தனர்.

மேற்படி திரையரங்கில் 6 வயதுக்கும் 12 வயதுக்குமிடைப்பட்ட பாடசாலைச் சிறுவர்கள் இருந்ததாக பொலிசார் தெரிவித்தனர்

வி-ரி

## இனப்பிரச்னை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். இலங்கைத் தமிழர் பிரச்னை மற்றும் இனப்பிரச்னை தொடர்பான முடிவுகளில் விடுதலைப் புலிகளின் பங்களிப்பு இல்லாமல் எதையுமே செய்யமுடியாதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ரி

## அம்பாறை

ப(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திற்கும் மேற்பட்ட பொலிஸ் அதிரடிப்படையினர் மீது விடுதலைப்புலிகள் திடீர் தாக்குதலை மேற்கொண்டனர்.

விடுதலைப்புலிகளின் ஏழு நிமிட நேர தாக்குதலில் 7க்கு மேற்பட்ட பொலிஸ் அதிரடிப்படையினர் அந்த இடத்திலே கொல்லப்பட ஏனையோர் தப்பியோடிவிட்டார்கள்.

ரோந்து அணியினருக்கு துணையாக வந்த பவள், கன்டர் வாகனங்கள்மீது எதிர் தாக்குதல்களை விடுதலைப்புலிகள் அணியினர் மேற்கொண்டு அவற்றை தடுத்து நிறுத்தினர்.

இத்தாக்குதலில் 2-ம் லெப். புவிவாணன் (நடராசா நேசராசா, அம்பாறை) என்ற போராளி வீரச்சாவு அடைந்துள்ளார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட ஏழு கொமாண்டோ படையினரும் கெரில்லா நடவடிக்கையில் விசேட பயிற்சி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

-இ-ரி

## கைப்பற்றப்பட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணீர் கொள்கலன்கள் -2, தொலைத் தொடர்பு சாதனம்-1, தொப்பிகள் - 4, தொலைநோக்கி 1 ஆகியஆயுத தளபாடங்கள் பொலிஸ் அதிரடிப்படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

- ரி

## தமிழகத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர் கொள்ளும் பாங்கு, தாக்குதல்களில் அவர்கள் பெறும் வெற்றி அவர்களை புறநானூற்று வீரர்களாக காட்டுகிறது. தமிழகத்தில் அகவாழ்வு மிக தமிழீழத்தில் புறவாழ்வு மிகுந்துள்ளது என்ற கருத்தை பிரபல எழுத்தாளர் சுஜாதா முன்வைத்து விடுதலைப் புலிகளை பாராட்டியுள்ளார்.

ராஜீவ் கொலையைத் தவிர விடுதலைப் புலிகள்மீது வேறெந்தக் குற்றச்சாட்டையும் இந்தியாவால் சுமத்த முடியாமலுள்ளது. இந்த நிலையில் விடுதலைப் புலிகளின் ஒப்பற்ற தியாகத்தினால் தமிழகத்தில் அவர்களின் செல்வாக்கை அதிகரித்து வருவது குறிப்பிடத்தககது.

-ரி

## க. பொ. த

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு லட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

சுமார் 88ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் அனுமதிபெற தகுதிபெற்றுள்ளனர்.

மருத்துவபீடத்துக்கு 10 ஆயிரம் மாணவர்களும், பொறியியல் பீடத்துக்கு 36 ஆயிரம் மாணவர்களும், வர்த்தகத்துறைக்கு 17 ஆயிரத்து 103 மாணவர்களும் கலைப் பீடத்துக்கு 25 ஆயிரத்து 594 மாணவர்களும் அனுமதி பெற தகுதி பெற்றுள்ளனர்.

இரி

## வருடாந்த திருவிழா

(அரியாலை]

கோப்பாய் புனித மரியாள் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 8ம் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற திருநாள்திருப்பலி, திருச்சொரூப பவனி ஆகியவற்றுடன் நிறைவு பெற்றது.

-59

## பொதுக் கூட்டம்

[அரியாலை]

இலங்கைச் சோதிட ஆய்வு மன்றத்தின் பொதுக் கூட்டம், நாளை 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

-59

# 3156அடையாள அட்டைகள் யாழ். வந்து சேர்ந்தது!

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு கடந்த ஆகஸ்ட் மாதம் விண்ணப்பம் செய்தவர்களின் 3156 அடையாள அட்டைகள்கொழும்பிலிருந்து யாழ். செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

இவை யாவும் யாழ். ஆட்பதிவுத் திணைக்களப் பிரிவினால் அந்தந்தப் பிரிவிலுள்ள பிரதேச செயலகங்களுக்கு தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவற்றில் பாடசாலை மாணவர்களின் 481 அடையாள அட்டைகளும் தொலைந்தவற்றிற்குப் பதிலாக விண்ணப்பித்தவர்களின் 518 அடையாள அட்டைகளும் புதிதாக விண்ணப்பம் செய்தவர்களின் 1449 அடையாள அட்டைகளும் புதுப்பிப்பதற்கு விண்ணப்பித்தவர்களின் 708 அடையாள அட்டைகளும் வந்துசேர்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

-71-ரி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post OfficeSri uLanka nder Licence Number B/16336/B-